02.03.2019.அ.வ.எண்.290/2007

பி.வா.சா.1, தர்மேஸ்வரன்

முதல் விசாரணையின் தொடர்ச்சி

15.03.1953 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் அசல் ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆகும். 21.02.1961 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் அசல் ஆவணம் பி.வா.சா.ஆ.2 ஆகும். 28.05.1986 தேதியிட்ட நகர்புற நிலவரி உச்ச வரம்பு உதவி ஆணையர் துரைசாமி முதலியாருக்கு வழங்கிய அறிவிப்பின் அசல் பி.வா.சா.ஆ.3 ஆகும். 31.12.1980 தேதியிட்ட நகர்புற நிலவரி உச்ச வரம்பு உதவி ஆணையர் துரைசாமி முதலியாருக்கு வழங்கிய அறிவிப்பின் அசல் பி.வா.சா.ஆ.4 ஆகும். 14.02.2007, 19.03.2002, 15.09.1998 மற்றும் 16.03.1993 ஆகிய தேதிகளில் எனது பெயரிலும் எனது தந்தையின் பெயரிலும் நான் செலுத்திய சொத்து வரிக்கான அசல் ரசீதுகள் நான்கு எண்ணிக்கை கொண்டது பி.வ.ா.ா.ஆ.5 ஆகும். சிவசங்கரன் மற்றும் துரைசாமி ஆகியோரின் இரண்டு பேர்களின் பெயரில் உள்ள மின் கட்டண அட்டையின் அசல் இரண்டு எண்ணிக்கை உடையது பி.வா.சா.ஆ.6 ஆகும். 5ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள தொலைபேசி இணைப்புக்கான கணக்கு பட்டியலின் அசல் பி.வா.சா.ஆ.7 ஆகும். 27.12.1975 தேதியிட்ட எனது தந்தை தாக்கல் செய்த படிவம் 33எ-வின் அலுவலக நகல் பி.வா.சா.ஆ.8 ஆகும். 07.04.2010 தேதியிட்ட எங்களது பெயருக்கு வழங்கப்பட்டுள்ள நகர அளவை நிலப்பதிவேட்டின் உண்மை நகல் பி.வா.சா.ஆ.9 ஆகும்.

(மேலும் சில ஆவணங்களை குறியீடு செய்வதற்கு வேண்டி பிரதிவாதியின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது)